ஏன் ஆசிரியர்களைப் போடவில்லை என்று சி. இ. ஓ. போன்ற அதிகாரிகளிடம் டெவலப்மென்ட் கவுன்சில் கூட்டத்தில் கேட்டபோது அரசின் கொள்கை அப்படி இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். ஆகவே, காலியான இடங்கள் இருந்தால் அங்கே பயிற்சி பெற்ற ஆசிரியர்களை உடனடியாகப் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் அவர்களைப் போடுவதற்கு உரிய இடங்கள் காலியாக இருக்கின்றன என்பது அவ்வளவு சரியல்ல. ஆனால் ஆசிரியர்—மாணவர் விகிதாசாரத்திற்கேற்ப ஆயிரக் கணக்கான இடங்களை ஏற்படுத்த வேண்டிய நிலைமை நாட்டில் இருக்கிறது. நிதி ஆதாரங்களைப் பொறுத்து ஆண்டுக்காண்டு புதிய இடங்களை ஏற்படுத்தி வருகிறோம். அதிலே அந்த ஆசிரியர்களைப் போட்டு வருகிறோம்.

நெல்லை மாவட்டத்தில் ஆசிரியர் பதவிகள்

* வினா 26—*திரு. ரா. கிருஷ்ணன்:* மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில், இப்பள்ளியாண்டில் புதிதாக எத்தனை ஆசிரியர்கள் நியமனம் செய்ய அனுமதிக்கப் பட்டுள்ளனர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேர் தனியார் பள்ளிகளில் நியமிக்க அனுமதிக்கப்பட்டனர்?

(இ) ஊராட்சி ஒன்றியங்கள் நகராட்சி போன்ற பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் தேவை என்று கணக்கிடப்பட்டதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) 1977—78 ஆம் கல்வியாண்டு முதல் திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்திய கூடுதல் ஆசிரியர் பதவிகள் 114-ல் 88 பதவிகள் தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்பட்டன.

1978 செப்டம்பர் 1]

(இ) ஆம். அனைத்து வகை (அரசு, தனியார், உள்ளாட்சி மன்ற) நிருவாகப் பள்ளிகளின் தேவைகளும் கணக்கிடப்பட்டு அதன் பின்னரே இப்பதவிகள் பங்கீடு செய்யப்பட்டன. ஆசிரியர், மாணவர் விகித அடிப்படையில் தனியார் பள்ளிகளுக்கே மிகுந்த எண்ணிக்கையில் கூடுதல் ஆசிரியர் பதவிகள் தேவைப்பட்டதால் அவற்றுக்குப் பெரும்பான்மையான பதவிகளை அளிப்பது தவிர்க்க முடியாததாக இருந்தது.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்தக் கேள்வியைச் சென்ற கல்வியாண்டில் கேட்டேன். எட்டு மாதங்களுக்குப் பிறகு பதில் வந்திருக்கிறது. மிக்க மகிழ்ச்சி.

மொத்தம் 114 இடங்கள் ஒதுக்கப்பட்டு 88 இடங்கள்தான் தனியாருக்குக் கொடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கடந்த ஆண்டு குறிப்பாக கோயில்பட்டி டிவிஷனில் எந்த ஒரு இடமும் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒதுக்கப்படவில்லை. தனியார் பள்ளிகளுக்கு இடம் ஒதுக்கப் படுவதால் அங்கே பல லஞ்ச ஊழல்கள் அதிகமாகத் தாண்டவமாடுகின்றன. இதற்காகவே தனியாருக்கு ஒதுக்கீடு செய்கிறார்கள். இதைக் கண்காணிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: என்னிடத்தில் தரப்பட்ட விவரப்படி புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் உபரியாக இருந்த 52 இடங்கள் ஆசிரியர்களுடன் கோயில்பட்டி ஊராட்சி ஒன்றியத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதாகும்.

திரு. சோ. அழகர்சாமி: இந்தப் புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கான இடங்கள் ஊராட்சி ஒன்றியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு இரண்டொன்றுதான் ஒதுக்கப்படுகிறது. பயிற்சி பெற்று வேலை இல்லாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கும்போது சீனியாரிடி முறையில் அதாவது 1970-ல் பயிற்சி பெற்று வந்தவர்களுக்கு வேலை கொடுத்துவிட்டுத்தான் 1971-ல் படித்து விட்டு வந்தவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டுமென்று அந்த வரிசைப்படி போட வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தால் லஞ்சம் ஊழல் இருக்காது. அதற்குத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து அவர்களை அனுப்புவதற்கு சில விதி முறைகளை வைத்திருக்கிறோம். அதன்படி அனுப்பப்படுகிறவர்களில் யாரையாவது சிறந்தவர்களாகக் கருதுவார்களானால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய உரிமையைப் பெறுகிறார்கள். அவ்வாறுதான் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளுக்கு அரசாங்கம் கிராண்ட் கொடுக்கிறது. அதிலே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற நியதி இருக்கிறது. ஆனால் மேனேஜ்மெண்டார்கள் கிராண்டை வாங்கிக்கொண்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல், அதற்காக கோர்ட்டுகளுக்குச் சென்று வழக்காடி சம்பளத்தை வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே அரசாங்கம் கொடுக்கக்கூடிய கிராண்டை ஆசிரியர்களுக்குச் சம்பளமாக நேரடியாக கொடுத்துவிட்டு, அதில் மீதம் ஏதாவது இருந்தால் மேனேஜ்மெண்டுகளுக்குக் கொடுக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் அவர்களுக்கு ஒழுங்காகப் போய்ச் சேரவேண்டுமென்பதிலே அரசுக்கு நல்ல அக்கறை இருந்து கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றுவதற்கு பல நடவடிக்கைகளைப்பற்றி ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம்.

Salary Savings Scheme for Union Employees in Mayuram.

* 27 *Q.*—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that the Salary Savings Scheme of the L.I.C. for the teachers, etc., in Mayuram block is not in vogue since April 1976 in spite of the Collector's instructions;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the action taken thereon by the Governmtnt to revive the scheme ?